(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(9).]

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 ஆகஸ்ட் 22, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 செப்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையில் முதலீடுகளை மேம்படுத்தல் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு குறித்து, அவ்வெளிநாட்டு மக்களால் அல்லது அந்நாட்டின் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் அல்லது ஏனைய அமைப்புக்களால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமென, 2025 பெப்ரவரி 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதும் 2025.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது, தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 123 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டிய நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெற்றுக்கொண்ட ஏதேனும் கடன் தொகையில் இருந்து பதின்மூன்று மில்லியன் இருநூற்று எண்பத்தைந்து மில்லியன் அறுநூறு ஆயிரம் ரூபாய்க்கு (ரூபா. 13,285,600,000) விஞ்சாத மேலதிக தொகையை செலுத்த வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு** | **123** - | நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மூலதனச் செலவினம் ரூ. | 13,285,600,000 |
| | | **மொத்தச் செலவினம் ரூ.** | **13,285,600,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 171 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2025 சனவரி மாதம் 01 ஆம் திகதியில் தொடங்குகின்ற மற்றும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திடம் உள்ள வேறு ஏதேனும் நிதியம் அல்லது நிதிகளிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பப்படி அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபாயினை (ரூபா 1,500,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு** | **171** - | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டெழும் செலவினம் ரூ. | 1,500,000,000 |
| | | **மொத்தச் செலவினம் ரூ.** | **1,500,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2025 ஆகஸ்ட் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 13,285,600,000 ஆகும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2025 செப்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2025 செப்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

717/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இயற்கை நீரோடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இயற்கை நீரோடைகளை அண்டியதாக இருக்க வேண்டிய நீரோடை ஒதுக்கத்திற்குரிய நிலப்பிரதேசத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) நீரோடை ஒதுக்கங்களை பலாத்காரமாக கையகப்படுத்தியுள்ள நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீரோடை ஒதுக்கங்கள் அறுதி உறுதிக் காணிகளாக வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நீரோடை ஒதுக்கக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நீரோடை ஒதுக்கக் காணிகளை மீண்டும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

972/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பிரதேச அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு வைத்தியசாலைக்குமென அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் தற்போது அங்கு பணிபுரிவோரின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்தாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) எத்திகதியில் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதையும்;

(vi) மருந்தாளர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ள போதும் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதால் எத்திகதியில் அந்நியமனங்கள் வழங்கப்படும் என்பதையும்;

(vii) மேற்படி வைத்தியசாலைகளில் நோயாளர் காவு வண்டி சாரதிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றனவா என்பதையும்;

(viii) அவ்வெற்றிடங்களை நிரப்பும் திகதி யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வேலனை பிரதேச வைத்தியசாலை B தர வைத்தியசாலையாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்விடயம் எத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றதென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையின் தரவரிசைப்படுத்தப்படுதலின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை மற்றும் தற்போது பணியாற்றி வரும் ஆளணியின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) தரவரிசைப்படுத்தலுக்கு அமைவாக ஆய்வுகூட மற்றும் ஆளணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், அவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

978/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.07.07ஆந் திகதி பருத்தித்துறையிலிருந்து (வெற்றிலைக்கேணிக் கடல்) ஆழ் கடலில் மீன் பிடிக்கச் சென்ற எம்.எப். முஸ்தகீத், என்.குணபாலசிங்கம், ஏ.ராதா கிருஷ்ணன் மற்றும் பிரேமசிறி ஆகிய மீனவர்கள் 194 நாட்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நட்ட ஈடு தொடர்பிலான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1071/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ‘ரட்டலங்காவ’ எனும் பெயரையுடைய காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணியிலிருந்து ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கையுதிர்க்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட காணியிலிருந்து லங்கா கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட காணியில், காணித் துண்டுகளை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணியாளர்களுக்கு வழங்குவதற்கான முறையான அங்கீகாரம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அங்கீகாரத்துடன் தொடர்புடைய கடிதத்தின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மற்றொரு காணிக்குப் பெறப்பட்ட அங்கீகாரத்தைப் பயன்படுத்தி, மேற்கூறப்பட்ட காணியின் சில பகுதிகளை மோசடியாகவும் சட்டவிரோதமாகவும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) மேற்கூறப்பட்ட காணியில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக வசித்து வரும் குடும்பங்கள் தொடர்பாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1074/2025

கௌரவ அஜந்த கம்மெத்தெகே,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கறுவாப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) கறுவாப் பயிச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(iii) கறுவாப் பயிச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களில், காலி மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) அந்த நிறுவனங்களைத் தாபிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நிறுவனங்கள் இன்றளவில் இயங்கு நிலையில் காணப்படுகின்றனவா என்பதையும்;

(vii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1100/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் நீண்ட காலமாக அதிபர்களாக பணியாற்றிய / பணியாற்றும் அதிபர்கள் අමප/12/1101/530/035 ஆம் இலக்க, 2012.08.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மிகை ஊழியர் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் தரம் 2(ii) மற்றும் தரம் 3 இற்கான அதிபர்களாக நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(ii) අමප/21/1824/308/139 ஆம் இலக்க, 2021.11.23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பகிரங்கச் சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/EST/02-05/01/2020 ஆம் இலக்க, 2022.06.02 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக அவர்களது நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலைகளின் தரப்படுதலுக்கு அமைவாக ஏனைய பாடசாலைகளின் அதிபர்களுக்கு செலுத்தப்படுகின்ற நிர்வாகக் கொடுப்பனவு மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட அதிபர்களுக்கும் 2018 மார்ச் வரையில் செலுத்தப்பட்ட போதிலும், தற்பொழுது அது செலுத்தப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அதிபர் வெற்றிடங்களுக்கான நியமனங்களுக்கும் வேறு அதிபர்களுடனான ஒத்து மாறுவதற்கும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் தற்பொழுது நிராகரிக்கப்படுகின்றதை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) உள்ளக மற்றும் வலயங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்படி (அ)இல் குறிப்பிடப்பட்ட அதிபர்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1104/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023, 2024 ஆண்டுகளிலும் மற்றும் 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிலும் இலங்கையில் உற்பத்திச் செய்யப்பட்ட சோளத்தின் அளவு மற்றும் இறக்குமதிச் செய்யப்பட்ட சோளத்தின் அளவு என்பன ஒவ்வொரு ஆண்டு வாரியாக வெவ்வேறாக மெட்ரிக் டொன்களில் எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கையில் சோள உற்பத்தியை மேம்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iii) இலங்கையில் சோள அறுவடை மேற்கொள்ளப்படும் காலங்களில் விவசாயிகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(iv) சோளத்தின் விலை ஏற்றவிறக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1111/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண் மற்றும் பெண் மருத்துவர் விடுதிகளுக்கென நிரந்தரக் கட்டிடமொன்று இல்லை என்பதுடன், மேற்படி விடுதிகள் தற்காலிக கட்டிடங்களிலேயே பேணிவரப்படுகின்றன என்பதையும்;

(ii) இந்திய அரசின் உதவியின் கீழ் நிரந்தர மருத்துவர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2017-2018 காலப்பகுதியில் திட்டமிடல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டு இதற்கான மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி திட்டம் தொடர்ந்தும் செல்லுபடியானதாக இருப்பின், மேற்படி மருத்துவர் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பது இடைநிறுத்தப்பட்டிருப்பின் அல்லது இரத்துச் செய்யப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1252/2025

கௌரவ சுனில் ரத்னசிறி,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் தற்போது பணிபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தற்போது அந்நிறுவனத்தில் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றனவா என்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள இலாபம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தின் சேவைகளைப் பெற்றுக்கொண்டு செலுத்தத் தவறிய கட்டணங்களின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) அந்த பெறுமதியை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1265/2025

கௌரவ அசோக குணசேன,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொல்கஹவெல, பொத்துஹெர, அளவ்வ குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகிக்கப்படவுள்ள பிரதேசங்கள் யாவை;

(ii) இத்திட்டத்தில் உள்வாங்கப்படாத பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) தற்போது கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டினால் இன்னலுக்கு உள்ளாகியுள்ள பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள, 13 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 2500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா;

(iv) இதற்கான காரணங்கள் யாவை;

(v) இக்குடிநீர் திட்டத்தின் பூர்வாங்கத் திட்டத்தில் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் குடிநீரை விநியோகிப்பதற்கு ஏற்கனவே முன்மொழியப்பட்டிருந்த வேலைத் திட்டம் பின்னர் மாற்றம் செய்யப்பட்டதா;

(vi) அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் மேற்படி குடிநீர் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறான நோக்கங்களுக்காக செலவிடப்படும்;

(ii) இதன் மூலம் அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படுமா;

(iii) மேற்படி குடிநீர் திட்டத்தை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை பொறுப்பேற்றுள்ளதா;

(iv) ஆமெனின், மேற்படி குடும்பங்களுக்கு குடிநீரை விநியோகிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி குடிநீர் திட்டத்தில் வீரம்புகெதர பிரதேச செயலகப் பிரிவு உள்வாங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 செப்தெம்பர் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

17/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை தேயிலை சபை நீண்ட கால மற்றும் குறுங்கால முதலீடுகளில் முதலீடு செய்துள்ள பணத்தொகை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி முதலீடுகளுக்கு முறையான அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

118/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இன்றளவில் காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இன்றளவில் உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக்கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுள்ள மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக்கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

220/2024

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்கத்தின் வசமுள்ள விதை நெல்லின் அளவு யாது என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை, இலங்கையில் விதை நெல்லுக்கான தேவைப்பாடு ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) பல்வேறு வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களின் காரணமாக விதை நெல்லின் தேவை அதிகரித்திருப்பதால், அரசாங்கத்திடம் போதியளவு விதை நெல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

341/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் சுமார் 478 சிறு குளங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி குளங்களுள், 200 இற்கும் குறைவான குளங்கள் மட்டுமே பராமரிக்கப்படுவதுடன் எஞ்சிய குளங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுதில்லை என்பதையும்;

(iii) மேற்படி குளங்களை புனரமைத்து பராமரிப்பதாயின், பிரதேசத்திலுள்ள விவசாயிகளை வலுப்படுத்த முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், பராமரிக்கப்படாத மேற்குறிப்பிட்ட குளங்களை உரிய முறையில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

624/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு புலம்பெயரும் சட்டவிரோத வெளிநாட்டு குடியேறிகளைத் தடுத்து வைத்திருப்பதற்கான ஒரு நிலையம் மிரிஹான பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தத் தடுப்பு நிலையத்தில் இன்றளவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு குடியேறிகளின் எண்ணிக்கை, அத்தகைய ஒவ்வொருவரினதும் நாட்டுக்கு அமைவாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) சட்டவிரோத வெளிநாட்டு குடியேறிகள் இலங்கைக்குப் புலம்பெயர்வதைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1113/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் தற்போது கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலவிடப்படுகின்ற ஆண்டுக்கான மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள் மூலம் ஈட்டப்படுகின்ற ஆண்டுக்குரிய வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1119/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவம் சார்ந்த ஆட்சேர்ப்புகள் என்ற வகைப்படுத்தலின் கீழ் தொழில்சார் கடமைகளுக்காக, இன்றளவில் முப்படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் இராணுவப் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்கள் ஆட்சேப்புச் செய்யப்பட்டுள்ள தொழில்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய வகைப்படுத்தலின் கீழ் இவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) கடமைகளில் ஈடுபடுத்தப்படும்போது, மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்களுக்கும் ஏனைய இராணுவ அங்கத்தவர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(vi) ஏனைய இராணுவ அங்கத்தவர்களுக்கு உள்ளதுபோன்ற பதவிகளும் பதவி உயர்வுகளும், மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற இராணுவ அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முப்படை மறுசீரமைக்கப்படுமாயின், மேற்படி வகைப்படுத்தலின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்கள் நீக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அது சம்பந்தமான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) முப்படை மறுசீரமைக்கப்படும்போது நீக்கப்படுகின்ற, நீக்கப்படவுள்ள மற்றும் ஓய்வெடுக்கச் செய்யப்படுகின்ற இராணுவ அங்கத்தவர்கள் சம்பந்தமான வேலைத்திட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1179/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில் —

(i) இயங்குகின்ற தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்கள் தரப்படுத்தலின் அடிப்படையில் இயங்குகின்றனவா என்பதையும்;

(ii) தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களின் எண்ணிக்கை தரப்படுத்தலின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) நிரந்தர காணி மற்றும் கட்டிட வசதிகளோடு / வசதிகளின்றி இயங்கும் தபாலகங்கள், உப தபாலகங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மாவட்டத்தில் நிரந்தர கட்டிடங்களின்றி இயங்கும் உப தபாலகங்களுக்கு நிரந்தர கட்டிடங்கள் வழங்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(v) கிளிநொச்சி, பரந்தன், பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய தபாலகங்களில் நவீன வசதிகள் மற்றும் கணினி வசதிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாரதிபுரம், புன்னைநீராவி மற்றும் பள்ளிக்குடா ஆகிய பிதேசங்களில் உப தபாலகங்கள் நிறுவப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016.09.05 ஆம் திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் அமைச்சரின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலரால் தபால்மா அதிபருக்கு அனுப்பப்பட்ட 2016.09.09 ஆம் திகதிய PPS&MR/HR/09-182 ஆம் இலக்க கடிதம் தொடர்பாக இதுவரையில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1242/2025

கௌரவ திலிண சமரகோன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக நெகும நிறுவனம் தற்போது இயங்குகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நிறுவனத்தில் செயற்பாட்டு நிலையிலுள்ள அலுவலகங்கள் மற்றும் கைத்தொழில் தளங்கள் யாவை என்பதையும்;

(iii) செயற்படாதிருப்பின், மூடப்பட்டுள்ள அலுவலகங்கள் மற்றும் கைத்தொழில் தளங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுராதபுரம், கெக்கிராவ, கனேவல்பொல பிரதேசத்தில் மக நெகும வேலைத் தளமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iii) அதனை மூடுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அங்கு காணப்படுகின்ற இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) அவற்றின் தற்போதைய பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(vi) அவற்றை இலங்கையிலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தும் வேலைத் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vii) அந்த மத்திய நிலையத்தை தொடர்ந்தும் பயன்படுத்தாவிடின், அதனை கையகப்படுத்தும் அடிப்படை யாதென்பதையும்;

(viii) அதனை கையகப்படுத்தும் நிறுவனம் யாதென்பதையும்;

(ix) கையகப்படுத்த எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(x) எக்காலப் பகுதியில் கையகப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1257/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாது;

(ii) ஒரு வீட்டுக்குள் பல குடும்ப அலகுகள் வாழும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதை அவர் அறிவாரா;

(iii) ஒரு வீட்டுக்குள் பல குடும்ப அலகுகள் வாழும் சந்தர்ப்பங்களில், இக்குடும்பங்களுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை தயாரிக்கையில், இக்குடும்பங்களை வெவ்வேறாக அடையாளம் காண்பதற்கு கிராம உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படும் முறைசார்ந்த நடைமுறை யாது;

(iv) ஒரு வீட்டுக்குள் பல குடும்ப அலகுகள் வாழும் சந்தர்ப்பங்களில், இக்குடும்பங்களுக்கான செயற்பாடுகளை மேற்கொள்கையில் நடைமுறை ரீதியான மற்றும் நிருவாக ரீதியான பிரச்சினைகள் எழுவதை அறிவாரா;

(v) ஆமெனில், அதற்கான தீர்வினை வழங்குவாரா;

(vi) அத்தீர்வுகள் யாவை;

(vii) தீர்வு வழங்கப்படுவதில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 செப்தெம்பர் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

204/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஸ்ரேலுக்கான விமானப் பயணக் கட்டணம் குறைக்கப்பட்ட திகதி யாது;

(ii) குறைக்கப்பட்ட கட்டண அளவு எவ்வளவு;

(iii) தற்போது இஸ்ரேலில் பணியாற்றி வருகின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி விமானப் பயணக் கட்டணங்கள் குறைக்கப்பட்ட போது பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்பதை அறிவாரா;

(v) இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

227/2024

கௌரவ அஜித் பீ. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'வளமான நாடு-அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக தாபிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்ட 'அரச சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான நிறுவனம்' தற்போது தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் மூலமாக களவாடப்பட்ட சொத்துக்களில் எந்தளவு சொத்துக்களை தற்போது அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தில் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) 2025 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினூடாக அல்லது இடைக்கால வாக்கு கணக்குப் பதிவு மூலமாக மேற்படி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

298/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நுகர்வுக்காக வருடமொன்றுக்கு தேவைப்படும் உப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி அளவிலான உப்பை பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் யாவையென்பதையும்;

(iii) உப்பு உற்பத்திச் செய்யும் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) எப்பிரதேசங்களில் அதிகளவில் உப்பு உற்பத்திச் செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) உற்பத்தி செய்யப்படும் உப்பினை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியசாலைகள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி களஞ்சியசாலைகளின் கொள்திறன் மற்றும் அக்கொள்திறன் போதுமானதாக அமையும் கால அளவு என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் தற்போதுவரை இலங்கைக்கு உப்பு இறக்குமதிச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், உப்பு இறக்குமதிச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறக்குமதிச் செய்யப்பட்ட உப்பின் அளவு என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) உப்பு இறக்குமதிச் செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

314/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி வங்கியின் வசமுள்ள சொத்துக்களின் தற்போதைய பெறுமதி யாதென்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி மகா சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) அனைத்து சமுர்த்தி மகா சங்கங்கள் வசமுள்ள சொத்துக்களின் தற்போதைய பெறுமதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி வங்கிகள் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் உள்ளனவா என்பதையும்;

(ii) இல்லையெனின், அதன் கண்காணிப்பிற்கு உட்படாமைக்கான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) சமுர்த்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் தலைவர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த 10 வருடங்களில் சமுர்த்தி வங்கியினால் ஈட்டப்பட்ட இலாபம்/ நட்டம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(ii) கடந்த 10 வருடங்களில் சமுர்த்தி வங்கியின் ஐந்தொகைப் பெறுமதி யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) சமுர்த்தி வங்கியின் பங்குதாரர்கள் யார் என்பதையும்;

(iv) வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதம் மற்றும் சமுர்த்தி வங்கியினால் சீரமைக்கப்பட்டவாறு கடன் பெறுநர்களுக்கான கடன் வீதம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

824/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட எண்ணெயின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி எரிபொருள் இறக்குமதியின் போது அதற்குரியதான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியினுள் அவசரக் கொள்வனவின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட எண்ணெயின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) அவசரக் கொள்வனவு மற்றும் சாதாரண பெறுகை நடைமுறைகளூடாகச் செய்யப்படுகின்ற கொள்வனவுகளுக்கிடையில் நிலவும் பணத்தொகை வித்தியாசம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

902/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் விலங்குகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி கணக்கெடுப்புக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கணக்கெடுப்பை மேற்கொண்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் அக்கணக்கெடுப்புடன் தொடர்புடைய முன்னேற்றங்கள் யாவை என்பதையும்;

(vi) அக்கணக்கெடுப்புக்கு அமைவாக மந்திகள், குரங்குகள், மர அணில்கள் மற்றும் மயில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விலங்குகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) விலங்குகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாத கிராம அலுவலர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iii) அக்கிராம அலுவலர் பிரிவுகளில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

983/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைமை அலுவலகம், பிரதேச அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலகங்களிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) சபையில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் அவர்களுக்குத் தேவையான ஏனைய வசதிகளை முழுமையாக வழங்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iii) சம்பள குறைப்பு தொடர்பில் சபை ஊழியர்கள் கடந்த தினங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், இந்த சம்பள குறைப்பு தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1123/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவியை கைவிட்டுச் சென்றுள்ள இலங்கை விமானப் படையைச் சேர்ந்த வீரர்கள்/அதிகாரிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களில் இலங்கை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் சரணடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) அவர்களை இலங்கை விமானப் படையிலிருந்து நீக்குவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை விமானப் படைக்கு C-130 விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறிவாரா;

(ii) தற்போது விமானப் படைக்கு சொந்தமாக உள்ள C-130 விமானங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி விமானங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் இறுதியாக எக்காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன;

(iv) புதிய C-130 விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்வதன் நோக்கம் யாது;

(v) மேற்படி புதிய C-130 விமானம் ஒரு அன்பளிப்பா; இன்றேல், புதிய கொள்வனவா;

(vi) அதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்த்துள்ள பணிகள் இதுவரைக் காலம் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட முறை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1159/2025

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பண்ணை முறையில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(ii) எனினும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறால் இறக்குமதி செய்யப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதையும்;

(iii) இதன் காரணமாக, இலங்கையின் இறால் வளர்ப்புத் தொழில்துறைக்கும் அத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுகிறது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறெனில், இறாலை மீள் ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக இலங்கையில் இறால் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1279/2025

கௌரவ நிசாந்த பெரேரா,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் காலி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை தேயிலைச் சபை மூலம் தேயிலை நாற்று மேடைகளை பேணிவருவதற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை தேயிலைச் சபை மூலம் உதவி வழங்கப்பட்டுள்ள தேயிலை நாற்று மேடைகளின் எண்ணிக்கை, உதவிபெறுநரின் பெயர், அளிக்கப்பட்ட உதவித்தொகை மற்றும் தேயிலை நாற்று மேடையின் பதிவு இலக்கம் ஒவ்வொரு பிரதேச செயலகம் வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி உதவி பெறுநர்கள் மத்தியில் இன்றளவில் தேயிலைத் நாற்று மேடைகளைப் பேணிவருகின்ற உதவிபெறுநர்கள் மற்றும் தேயிலைத் நாற்று மேடைகளைப் பேணிவராத உதவிபெறுநர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2025 செப்தெம்பர் 26, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

677/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கம் இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டமொன்றுக்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப் பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினால் மேற்படி கருத்திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், இக்கருத்திட்டம் இரத்துச் செய்யப்படுமா என்பதையும்;

(iv) புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறைக்கு சர்வதேச முதலீட்டாளர்களை கவரும் பொருட்டு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

737/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை விடுவிப்பதில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையின் பிரதான கடல்சார் விநியோக நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்கள் ஒரு கூட்டுச் செயற்திட்டத்தை முன்மொழிந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி திட்டத்தில் உள்ள முன்மொழிவுகள் யாவை என்பதையும்;

(ii) அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

810/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'E-Motoring' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) குறித்த நிறுவனத்தைத் தெரிவு செய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அந்தக் கருத்திட்டத்தில் பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த விடயம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

834/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காற்றுத் தரச் சுட்டியின்படி கண்டி நகரம் மிக அதிகளவு ஆபத்தான மட்டத்தில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

880/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

980/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) அநுராதபுரம், கல்னேவ, ஹோரகொடயாகம விதைப் பண்ணைக்குரிய காணியின் பரப்பளவு ஏக்கரில் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பண்ணை நபரொருவருக்கு/நிறுவனமொன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆண்டு எதுவென்பதையும்;

(vi) இப்பண்ணையை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நபரின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி நபர்/நிறுவனத்தினால் உரிய முறையில் குத்தகைப் பணம் செலுத்தப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1008/2025

கௌரவ ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகத் தளங்களில் பரப்பப்படும், குறிப்பாக இலங்கையில் இன முறுகல்களை அல்லது கும்பல் வன்முறைகளைத் தூண்டும் தவறான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களின் உள்ளடக்கங்கல்கள் பரப்புதலை கண்காணித்துக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அத்தகைய ஆபத்தான உள்ளடக்கங்களைப் பரப்புவதைத் தடுப்பதற்காகச் சமூக ஊடக நிறுவனங்களுடனும் தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அத்தகைய ஈடுபாடுகளின் தன்மை யாதென்பதையும்;

(iv) அந்த ஈடுபாடுகளின் மூலம் அடைந்துள்ள முன்னேற்றங்கள் யாவையென்பதையும்;

(v) இணைய வழி வெறுப்புப் பேச்சுக்கள், இன முறுகல்களுக்கான தூண்டுதல்கள் அல்லது கும்பல்களைத் திரட்டுதல் ஆகியன தொடர்பாக மேற்பார்வை செய்வதற்காக ஏதேனும் பிரத்தியேகமான கண்காணிப்பு அலகு அல்லது முகவர்களுக்கிடையிலான செயலணி தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) வெறுப்புப் பேச்சுத் தொடர்பான வகைப்பொறுப்புப் பொறிமுறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1210/2025

கௌரவ எம்.எஸ்.உதுமாலெப்பை,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் முஸ்லீம்களின் மபாஸா பள்ளிவாசலுக்கு அருகில் இஸ்ரேலுக்கு சொந்தமான சட்ட விரோத 'சபாத் இல்லம்' எனுமொரு நிறுவனம் இயங்கி வருவது குறித்து அறிவாரா;

(ii) மேற்படி நிறுவனம் எவ்வளவு காலமாக இயங்கி வருகின்றது;

(iii) மேற்படி நிறுவனம் அமைந்துள்ள காணி வழங்கப்பட்டுள்ள அடிப்படை யாது;

(iv) மேற்படி நிறுவனத்துக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையால், இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலில் கவர்ச்சிகரமான பிரதேசமாகத் திகழும் அறுகம்பே பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் அச்சமடைந்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(v) மேற்படி நிறுவனத்தை அகற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vi) மேற்படி நிறுவனம் தொடர்பில் அமைச்சானது, பொத்துவில் பிரதேச செயலகம் மற்றும் பொத்துவில் பிரதேச சபையிடமிருந்து அறிக்கையொன்றை கோரியுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1270/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மூன்று பிரதான ஏற்றுமதிப் பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) பிரதான ஏற்றுமதிப் பயிராக தென்னை அறிவிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் எண்ணிக்கை மற்றும் தெங்கு பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையில் தேங்காய் விளைச்சலை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) தெங்கு சார்ந்து இலங்கையில் இன்றளவில் நடைமுறையிலுள்ள கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) தெங்கு சார்ந்த உற்பத்திகள் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் வருடாந்த வெளிநாட்டுச் செலாவணி அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் மட்டை சார்ந்து இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களின் எண்ணிக்கை, அவற்றின் பிரதான ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தேங்காய் மட்டைக் கைத்தொழில் சார்ந்து எழுந்துள்ள முக்கியமான பிரச்சனைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1295/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (கூட்டிணைத்தல்) சட்டத்தின் பிரகாரம், வறிய பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் நோக்கில் 'ரெஜீ ரணதுங்க கல்விசார் புலமைப் பரிசில் நிதியம்' ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்தில், மினுவங்கொட, பன்சில்கொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள 100 பேர்ச்சஸ் பரப்பளவு கொண்ட காணி, 2003.04.07 ஆம் திகதி அந்நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) 2005 ஆம் ஆண்டு, மேற்படி காணியில் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, தொழிற்பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டு அந்நிலையம் மூடப்பட்டது என்பதையும்;

(iv) 2023 ஆம் ஆண்டு, அக்கட்டடத்தை உடைத்தகற்றி, மேற்படி காணியைச் சுற்றி கம்பி வேலி அமைத்து, வாயிற்கதவை பொறுத்தியது மாத்திரமன்றி அக்காணியில் தென்னங் கன்றுகளையும் நாட்டி அதனை தனியார் உடைமை கொள்வதற்கான நடவடிக்கைகள் மோசடியான முறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி காணியை பொது மக்களின் பொதுப் பயன்பாட்டுக்காக, பொருத்தமான அரச நிறுவனமொன்றிடம் கையளிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 85/2025

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 137 இன் பிரகாரம் தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்கான பின்வரும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 (4) இன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:—**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.